மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, இந்து-சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/74) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, இந்து-சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/74) நிறைவேற்றப்பட வேண்டும்".

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, இந்து-சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/74) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(6) தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு, இந்து-சமய அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண் 21/74).

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்து இந்து-சமய அறக்கட்டளைகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/74) பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று நான் முன்மொழிகிறேன்.

@ 144 ஆம் பக்கத்தில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

1974 ஏப்ரல் 23] [திரு. மு. கண்ணப்பன்]

சம்பந்தப்பட்ட சமய நிறுவனங்களின் அறங்காவலர்கள் அந்த நிறுவனங்களின் கணக்குகள் தணிக்கை செய்யப்படுவதற்காக அவற்றைக் கொணர வேண்டுமென்று தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 22/1959) 87 ஆவது பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவு வகை செய்கிறது. ஆயினும், கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கு கொண்டு வந்து காட்டுவதற்கு கால வரையறை எதுவும் நிச்சயிக்கப்படவில்லை.

கணக்குகளைக் கொண்டு வந்து காண்பிப்பதற்கு சட்டப்படி காலவரையறை எதுவும் நிச்சயிக்கப்படாததை ஒரு சில அறங்காவலர்கள் பயன்படுத்திக் கொண்டு கணக்குகளைக் கொண்டு வந்து காட்டக் காலதாமதம் செய்யலாம் அல்லது கொண்டு வந்து காட்டாமல் ஏய்க்கலாம் என்றும், எனவே கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காகக் கொண்டு வந்து காட்டுவதற்கு காலவரையறை நிச்சயிப்பது மிகவும் அவசியம் என்றும் கருதப்படுகிறது. எனவே, கணக்குகள், பதிவேடுகள் முதலியவற்றை தணிக்கைக்காக தணிக்கையாளர்களுக்குச் சமய நிறுவனத்தின் அறங்காவலர்கள் அனுப்புவதற்கான கால வரையறையை நிச்சயிப்பதற்காக விதிகள் இயற்ற அதிகாரம் மேற்கொள்ளும் பொருட்டு, மேற்படி சட்டத்தின் 87 ஆவது பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவைத் திருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பிரேரணையை ஏற்று, நிறைவேற்றித் தருமாறு இம்மன்றத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் முன்உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு இந்து-சமய அறக் கட்டளைகள் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/74) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, நெடுந் தலைப்பு, முகப்புரை ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு இந்து-சமய அறக் கட்டளைகள் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு என் 21/74) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன்உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண் 21/74) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(7) தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, இந்து-சமய அறக்கட்டளைகள் (மூன்றும் திருத்தச்) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 22/74)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1974) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

தமிழ் நாடு (மாற்றப்பட்ட பகுதி) 1959-ம் ஆண்டு இணைக்கப்பட்ட, இணைக் கப்படாத தேவஸ்வங்கள் சட்டத்தினையொட்டி (தமிழ் நாடு சட்டம் 30/1959) மாற்றப்பட்ட பகுதியிலுள்ள, அதாவது, திருநெல்வேலி மாவட்டத்தின் செங் கோட்டை வட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் உள்ள இணைக்கப் பட்ட, இணைக்கப்படாத வேதஸ்வங்களையும், அவற்றின் சொத்துக்கள், நிதிகள் ஆகியவற்றையும் நிர்வகிக்க, மேற்பார்வையிட அவற்றின் மீது கட்டுப்பாடு செலுத்துவதற்காக மாநிலங்கள் சீரமைக்கப்பட்ட பின்னர், கன்னியாகுமரி தேவஸ்வக் குழு அமைக்கப்பட்டது. மாற்றப்பட்ட பகுதிகளில் 458 இணைக்

@ 145–170 ஆம் பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS